**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 64/2021**

2026–ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 27–ம் நாள் செவ்வாய்க்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 27.01.2026 | | |
| பெயர்: | ஜெயந்தி<br>(PW–2 Chief ) | கணவர் பெயர்: | பாஸ்கர் |
| கிராமம்: | கும்பகோணம் | தாலுக்கா: | கும்பகோணம் |
| தொழில்: | டெக்ஸ்டைல்ஸ் | வயது : | 51/2026 |

**முதல் விசாரணை : 27.01.2026**

நான் இவ்வழக்கின் 1ம் வாதியாவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். என்னுடைய சாட்சியத்தை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அந்த நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். அந்த நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். வழக்கிற்கு ஆதரவாக கீழ்காணும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1. 04.01.1997 தேதியிட்ட எனது தகப்பனார் பெயரிலுள்ள கூட்டுப்பட்டா அசல் **வா.சா.ஆ.7** ஆகவும்

2. 04.12.2015 தேதியிட்ட எனது தகப்பனார் இந்திரேசனின் வாரிசு சான்றிதழ் **வா.சா.ஆ.8** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

மேற்படி ஆவணங்களை ஏற்றுக்கொண்டு தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.